சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M.முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**MCOP.No.32/2021**

மனுதாரர் தரப்பு சாட்சி எ.ம.சா.1 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திரு. P. செந்தில்குமார், பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

பெயர்: திரு. ஆதித்தியவிஷ்வா த/பெ: சேதுராஜன்

வயது: ஊர் :

தொழில்: முகவரி:

தேதி: 19.01.2026 தாலுக்கா :

**முதல் விசாரணை...**

இம்மனுவில் 2 ஆம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் என் முதல் விசாரணையை எழுத்து மூலமாக முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்ட விபரங்கள் எனக்கு நன்கு தெரியும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான்.

| வ. எண் | நாள் | ஆவணவிபரம் | ஆவணத் தன்மை | |
|---|---|---|---|---|
| 1 | -- | திருவாரூர் நகர காவல்நிலைய குற்ற எண்.2126/2020 குற்ற அறிக்கை | கணிணி பதிவிறக்க நகல் | எ.ம.சா.ஆ.1 |

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து ஏற்பட்டபோது 1 ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். 1 ஆம் எதிர்மனுதாரரருக்கு சொந்தமான வாகனத்தை ஓட்டிய ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 ஆவணத்தின் படி இரண்டு இருச்சக்கர வாகனங்கள் மோதிக்கொண்டதாக சொல்லப்பட்டுள்ளது

என்றால் விபத்தில் ஈடுபட்ட வாகனங்கள் சொல்லப்பட்டுள்ளது. எங்கள் நிறுவனம் சார்பாக விபத்து குறித்து ஆய்வுமேற்கொள்ளப்பட்டதா என்றால் ஆமாம். அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் காவல்துறையினர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துவிட்டதால் நாங்கள் தாக்கல் செய்யவில்லை. காயம்பட்ட நபர் மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் மட்டும் வாங்கிக்கொண்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து 3 ஆம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனவே மனுதாரருக்குண்டான இழப்பீட்டு தொகையை எங்கள் நிறுவனம்தான் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.